Tc. 50

# 005/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS - PAPER - II (ACCOUNTS AND AUDIT OF LOCAL BODIES APPLICATION OF RULES AND AUDIT CHECKS)

(Without Books)

Maximum Time : 1.30 hours Maximum Marks : 60

### ***IMPORTANT INSTRUCTIONS***

### OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Who is the Vice Chairman of District High Level Committee for Settlement of Audit Objections for Municipality?

(A) District Collector

(B) Regional Director of Municipal Administration

(C) Regional Executive Engineer

(D) Regional Joint Director of Local Fund Audit

நகராட்சிகளின் தணிக்கைத் தடைகளை நீக்கும் அதிகாரம் பெற்ற மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவின் துணைத் தலைவர் யார்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்

(C) மண்டல செயற்பொறியாளர்

(D) உள்ளாட்சி நிதித் தணிக்கை மண்டல இணை இயக்குநர்

2. The Lapsed Depost in a Panchayat Union should be refunded only with the sanctin of

(A) District Collector

(B) Chairman

(C) Council

(D) Appointment Committee

ஊராட்சி ஒன்றியத்தில் காலங்கடந்த வைப்புத் தொகையினை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கும் அதிகாரம்

(A) மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) ஒன்றிய குழுத் தலைவர்

(C) ஊராட்சி ஒன்றிய குழு

(D) நியமனக் குழு

3. According to Tamil Nadu Local Fund Audit Rules 2016 – Section 7 for non-presentation of annual accounts after 30 days from the due date, the Penalty leviable is

(A) Rs. 1,000

(B) Rs. 2,000

(C) Rs. 3,000

(D) Rs. 5,000

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016-பிரிவு7ன்படி ஆண்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேல் சமர்ப்பிக்காததற்குரிய தண்டத் தொகை

(A) ரூ. 1,000

(B) ரூ. 2,000

(C) ரூ. 3,000

(D) ரூ. 5,000

4. Account No. 7 maintained in Village Panchayat is related to

(A) Village Panchayat Fund Account

(B) Village Panchayat Staff Salary Account

(C) Staff Funded Schemes Account

(D) Centrally Sponsered Schemes Fund Account

கிராம ஊராட்சிகளில் பேணப்படும் கணக்கு எண். 7 எந்த செலவினத்தை சார்ந்தது?

(A) ஊராட்சி நிதி கணக்கு

(B) பணியாளர்களின் ஊதியக் கணக்கு

(C) பணியாளர்களின் திட்டநிதிக் கணக்கு

(D) மத்திய அரசு திட்ட நிதிக் கணக்கு

5. What is the Ceiling Fixed for Maintenance of 5 HP Motor Power Pump in Village Panchayat as per G.O. MS. No. 157, RDPR Dept. Dated 21.12.2015

(A) Rs. 5,000 (B) Rs. 7,500

(C) Rs. 10,000 (D) Rs. 12,000

அரசாணை நிலை எண். 157, ஊ.வ.ம.ஊ. துறை, நாள். 21.12.2015ன் படி கிராம ஊராட்சிகளில் 5 குதிரைத்திறன் கொண்ட விசைப்பம்பு மோட்டாருக்கான பராமரிப்பு செலவின உச்சவரம்பு என்ன?

(A) ரூ. 5,000 (B) ரூ. 7,500

(C) ரூ. 10,000 (D) ரூ. 12,000

6. What is the Ceiling of Expenditure for Conduct of Sports in Village Panchayat?

(A) Rs. 1,000 (B) Rs. 5,000

(C) Rs. 10,000 (D) Rs. 25,000

கிராம ஊராட்சிகளில் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான செலவின உச்ச வரம்பு எவ்வளவு?

(A) ரூ. 1,000 (B) ரூ. 5,000

(C) ரூ. 10,000 (D) ரூ. 25,000

7. Remuneration may be paid to lineman in Village Panchayat to replacement the tube lights and sodium vapour lamps.

(A) Rs. 5 (B) Rs. 25

(C) Rs. 50 (D) Rs. 60

கிராம ஊராட்சிகளில் குழல் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் மாற்றுவதற்காக மின்பாதையாளருக்கு வழங்கப்படும் செலவினத் தொகை

(A) ரூ. 5 (B) ரூ. 25

(C) ரூ. 50 (D) ரூ. 60

8. Under what basis the Supply of Water to Educational Institutions to be treated?

(A) Domestic

(B) Non-Domestic

(C) Free Supply

(D) Commercial

கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் குடிநீர்க் கட்டணம் எந்த அடிப்படையில் வசூலிக்கப்பட வேண்டும்?

(A) குடியிருப்பு உபயோகம்

(B) குடியிருப்பு உபயோகம் அல்லாதது

(C) இலவச விநியோகம்

(D) வணிக உபயோகம்

9. Tamil Nadu Local Fund Audit Rules–2016 come into force on

(A) 24.08.2016 (B) 14.12.2014

(C) 14.08.2016 (D) 01.04.2016

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் -2016 அமலுக்கு வந்த நாள்

(A) 24.08.2016 (B) 14.12.2014

(C) 14.08.2016 (D) 01.04.2016

10. The taxes due to the municipalities becomes time-barred after the expiry of 12 years. The responsibility of bill-collector for the loss of percentage.

(A) 20% (B) 25%

(C) 30% (D) 40%

நகராட்சிகளில் 12 ஆண்டுகளுக்கு பிறகு காலாவதியாகும் வரியினங்களின் இழப்புகளில் வரித்தண்டலரின் பொறுப்பு சதவீதம் எவ்வளவு?

(A) 20% (B) 25%

(C) 30% (D) 40%

11. A special grade Municipality can contribute to the Tamil Nadu Institute of Urban Studies, Coimbatore a sum of

(A) Rs. 50,000 (B) Rs. 90,000

(C) Rs. 1,50,000 (D) Rs. 2,00,000

கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு சிறப்பு நிலை நகராட்சியானது செலுத்த வேண்டிய பங்குத் தொகை

(A) ரூ. 50,000 (B) ரூ. 90,000

(C) ரூ. 1,50,000 (D) ரூ. 2,00,000

12. The Audit Fees for Municipalities is

(A) 25% of actual cost

(B) 50% of actual cost

(C) 60% of actual cost

(D) 100% of actual cost

நகராட்சிகளின் தணிக்கை கட்டணமானது

(A) உண்மைச் செலவினத்தில் 25%

(B) உண்மைச் செலவினத்தில் 50%

(C) உண்மைச் செலவினத்தில் 60%

(D) உண்மைச் செலவினத்தில் 100%

13. What is the (Bi-monthly) ceiling fixed for free-calls for the residential telephone of selection grade municipal commissioner?

(A) 335 free calls
(B) 400 free calls
(C) 500 free calls
(D) 600 free calls

தேர்வு நிலை நகராட்சி ஆணையரின் இல்லத் தொலைபேசி இலவச அழைப்புகளுக்கு (இரண்டு மாதங்களுக்கு) உச்ச வரம்பு என்ன?

(A) 335 இலவச அழைப்புகள்
(B) 400 இலவச அழைப்புகள்
(C) 500 இலவச அழைப்புகள்
(D) 600 இலவச அழைப்புகள்

14. As per G.O.Ms. No. 927, M.A.W.S. Dept. Dated 21.12.1989 the number of colour Television allowed to Purchase and maintenance from their own funds in a Selection grade Municipality

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

அரசாணை எண். 927, ந.நி.ம.கு.வ.துறை நாள். 21.12.1989ன்படி, தேர்வு நிலை நகராட்சிகளில் சொந்த நிதியிலிருந்து வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கவும் மற்றும் பராமரிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

15. In Town Panchayats free supply of Uniforms to made sanitary workers, the number of sets are

(A) Two Sets Full Pant
(B) Two Sets Half Pant
(C) One Sets Full Pant
(D) One Set Half Pant

பேரூராட்சிகளில் துப்பரவு பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய இலவச சீருடைகளின் எண்ணிக்கை

(A) இரண்டு முழுக்கால் சட்டைகள்
(B) இரண்டு அரைக்கால் சட்டைகள்
(C) ஒரு முழுக்கால் சட்டைகள்
(D) ஒரு அரைக்கால் சட்டைகள்

16. In Townpanchayats amount of Bonus eligible to Bill-collector for collecting the 100% amount of current demand is

(A) Half Month Pay
(B) $\frac{3}{4}$ Month Pay
(C) 1 Month Pay
(D) $1\frac{1}{2}$ Months Pay

பேரூராட்சிகளில் 100 சதவீத நடப்பு கேட்பு வசூலிக்கப்படும் நிகழ்வில் வரித்தண்டலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊக்கத் தொகை

(A) அரைமாத ஊதியம்
(B) முக்கால் மாத ஊதியம்
(C) ஒரு மாத ஊதியம்
(D) ஒன்றரை மாத ஊதியம்

17. Who is the sanctioning authority for the Travelling Allowance bill of the selection grade municipal commissioner

(A) The Council
(B) Regional Director of Municipal Administration
(C) Joint Director of Municipal Administration
(D) Director of Municipal Administration

தேர்வு நிலை நகராட்சி ஆணையரின் பயணப்படி பட்டியல் அனுமதிக்கப்படும் அதிகாரம் படைத்தவர்

(A) மன்றம்
(B) நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர்
(C) நகராட்சி நிர்வாக இணை இயக்குநர்
(D) நகராட்சிகள் நிர்வாக இயக்குநர்

18. What is the monthly ceiling of fuel to vehicles allotted to special grade municipal chairman?

(A) 100 litres
(B) 125 litres
(C) 150 litres
(D) 200 litres

சிறப்பு நிலை நகராட்சி தலைவரின் வாகனத்திற்கான மாதாந்திர எரிபொருள் உச்சவரம்பு என்ன?

(A) 100 லிட்டர்
(B) 125 லிட்டர்
(C) 150 லிட்டர்
(D) 200 லிட்டர்

19. How much of amount may be spent by the municipality for Republic day celebration as per G.O.No. 125, MAWS dept. 13.05.1996?

(A) Rs. 500 (B) Rs. 1,000

(C) Rs. 2,000 (D) Rs. 2,500

அரசாணை எண். 125, ந.நி.ம.கு.வ.துறை நாள். 13.05.1996ன் படி குடியரசு தின விழாவிற்கு ஒரு நகராட்சியில் எவ்வளவு செலவிடப்படலாம்?

(A) ரூ. 500 (B) ரூ. 1,000

(C) ரூ. 2,000 (D) ரூ. 2,500

20. The Panchayat Union can pay the annual subscription to the Indian Red Cross Society a sum of

(A) Rs. 250 (B) Rs. 500

(C) Rs. 1,000 (D) Rs. 2,500

ஒரு ஊராட்சி ஒன்றியத்தால் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஓராண்டுக்கு வழங்க வேண்டிய பங்குத் தொகை

(A) ரூ. 250 (B) ரூ. 500

(C) ரூ. 1,000 (D) ரூ. 2,500

21. In Town Panchayats the Bus Stand fee collected in "A" class Bus Stand is

(A) Rs. 5 (B) Rs. 8

(C) Rs. 12 (D) Rs. 15

பேரூராட்சிகளில் "A" வகை பேருந்து நிலையங்களில் பேருந்துகளுக்கு வசூலிக்கப்படும் நுழைவுக் கட்டணம்

(A) ரூ. 5 (B) ரூ. 8

(C) ரூ. 12 (D) ரூ. 15

22. In Town Panchayat the retirement age of Sanitary supervisors

(A) 55 (B) 58

(C) 60 (D) 62

பேரூராட்சிகளில் பணிபுரியும் சுகாதார மேற்பார்வையாளர்கள் ஓய்வு பெறும் வயது

(A) 55 (B) 58

(C) 60 (D) 62

23. In Town Panchayat, in respect of works audit objections what is the percentage of amount to be recovered from Executive Officer?

(A) 15% (B) 20%

(C) 30% (D) 40%

பேரூராட்சிகளில் வேலைகள் செலவுச்சீட்டுகள் தணிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளுக்கு செயல் அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்ய வேண்டிய சதவீதம் எவ்வளவு?

(A) 15% (B) 20%

(C) 30% (D) 40%

24. As per G.O. Ms.No. 569 RDPR Dt. 28.09.2007, the fixed Tour allowance for District Panchayat Chairman is

(A) Rs. 400 (B) Rs. 500

(C) Rs. 750 (D) Rs. 1,500

அரசு ஆணை நிலை எண். 569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள். 28.09.2007ன்படி மாவட்ட ஊராட்சி தலைவருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிரந்தர பயணப்படி

(A) ரூ. 400 (B) ரூ. 500

(C) ரூ. 750 (D) ரூ. 1,500

25. As per G.O. Ms. No. 127 RDPR Dt. 12.07.2007, the fuel ceiling for panchayat Union Block Development Officer (Village Panchayat) is

(A) 100 litre
(B) 125 litre
(C) 150 litre
(D) 200 litre

அரசு ஆணை நிலை எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள். 12.07.2007ன்படி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிராம ஊராட்சி) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள எரிபொருள் உச்ச வரம்பு எவ்வளவு?

(A) 100 லிட்டர்
(B) 125 லிட்டர்
(C) 150 லிட்டர்
(D) 200 லிட்டர்

26. What is the Audit fees payable for auditing university accounts?

(A) 50%
(B) 60%
(C) 80%
(D) 100%

பல்கலைக்கழகத்தின் தணிக்கைக்காக செலுத்தப்பட வேண்டிய தணிக்கை கட்டணம் என்ன?

(A) 50%
(B) 60%
(C) 80%
(D) 100%

27. Inspector of Panchayat Union is

(A) Chairman
(B) Project Director
(C) District Collector
(D) Director of Rural Development

ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வாளர்

(A) ஒன்றியக் குழு தலைவர்
(B) திட்ட இயக்குநர்
(C) மாவட்ட ஆட்சித் தலைவர்
(D) ஊரக வளர்ச்சி இயக்குநர்

28. Which Tax is collected by Hill station municipalities?

(A) Timber Tax
(B) Pilgrim Tax
(C) Advertisement Tax
(D) Tax on Servants

மலைப்பிரதேசங்களில் உள்ள நகராட்சிகளில் மட்டும் வசூலிக்கப்படும் வரியினம்

(A) மரவரி
(B) யாத்திரீகர் வரி
(C) விளம்பர வரி
(D) வேலையாட்கள் மீதான வரி

29. The Labour Welfare fund to be deducted from a contractor w.e.f 17.12.2013

(A) 0.3% (B) 1%

(C) 1.5% (D) 2%

17.12.2013 முதல் வேலைப்பட்டியல்களில் ஒப்பந்தகாரரிடமிருந்து பிடித்தம் செய்ய வேண்டிய தொழிலாளர் நல நிதி

(A) 0.3% (B) 1%

(C) 1.5% (D) 2%

30. The delegation of financial powers for Director of Local Fund Audit to admit excessive or irregular expenditure/waiver of recoveries

(A) Rs. 1,500 (B) Rs. 1,200

(C) Rs. 1,000 (D) Rs. 750

உள்ளாட்சி நிறுவனங்களில் உள்ள மிகைச் செலவினம்/அனுமதியற்ற செலவினம் குறித்த தணிக்கைத் தடைகளை நீக்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி அனுமதி எவ்வளவு?

(A) ரூ. 1,500 (B) ரூ. 1,200

(C) ரூ. 1,000 (D) ரூ. 750

31. Which one of the following does not require pre-measurements?

(A) Jungle clearance (B) White washing

(C) Colour washing (D) Gravel collection

கீழ்க்கண்டவற்றில் முன் அளவு தேவைப்படாத இனம்

(A) முட்கள் அகற்றுதல் (B) வெள்ளை அடித்தல்

(C) வண்ணம் அடித்தல் (D) கப்பி சேகரித்தல்

32. What is the rate of Audit fees for the audit of the accounts of the Local Library authority other than Chennai city?

(A) Actual cost of Audit (B) 25% of Actual cost

(C) 50% of actual cost (D) Free of cost

சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களிலுள்ள மாவட்ட நூலக ஆணைக்குழு தணிக்கைக்கான தணிக்கை கட்டண விகிதம் என்ன?

(A) உண்மைச் செலவினம் (B) உண்மைச் செலவினத்தில் 25%

(C) உண்மைச் செலவினத்தில் 50% (D) இலவசம்

33. What is the periodicity in which the revision of profession tax has to made compulsory by the Government?

(A) Once in 3 yrs. (B) Once in 4 yrs.

(C) Once in 5 yrs. (D) Once in 10 yrs.

தொழில் வரி சீராய்வு எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்?

(A) மூன்று வருடத்திற்கு ஒரு முறை (B) நான்கு வருடத்திற்கு ஒரு முறை

(C) ஐந்து வருடத்திற்கு ஒரு முறை (D) பத்து வருடத்திற்கு ஒரு முறை

34. What is the nearest value to which the Annual value of the property is to be round-off?

(A) Rs. 5 (B) Rs. 10

(C) Rs. 100 (D) Rs. 1

ஒரு சொத்தின் வருடாந்திர மதிப்பானது எந்த நிகர மதிப்பிற்கு முழுமையாக்கப்பட வேண்டும்?

(A) ரூ. 5 (B) ரூ. 10

(C) ரூ. 100 (D) ரூ. 1

35. What is the Rate of Audit fees for the audit of accounts of a market committee?

(A) 2% of total expenditure (B) 1% of total expenditure

(C) 1.5% of total expenditure (D) Free of Cost

மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுவிற்கான தணிக்கை கட்டணம் எவ்வளவு?

(A) மொத்த செலவினத்தில் 2% (B) மொத்த செலவினத்தில் 1%

(C) மொத்த செலவினத்தில் 1.5% (D) இலவசம்

36. Who is competent to give Administrative approval for a work under MLACD Scheme?

(A) Collector (B) Panchayat union council

(C) Government (D) Project Director

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர் (B) ஊராட்சி ஒன்றியக் குழு

(C) மாநில அரசு (D) திட்ட இயக்குநர்

37. What is the monthly cell phone charges of the President of Town-Panchayat?

(A) Rs. 500 (B) Rs. 600

(C) Rs. 750 (D) Rs. 1,000

பேரூராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் கைபேசி கட்டணம் எவ்வளவு?

(A) ரூ. 500 (B) ரூ. 600

(C) ரூ. 750 (D) ரூ. 1,000

38. Which one of the following is not exempted to Profession-tax?

(A) Armed personnel

(B) Central Reserve Police

(C) Physically Handicapped

(D) Lawyers

கீழ்க்கண்டவற்றில் யாருக்கு தொழில்வரி விலக்களிக்கப்படவில்லை?

(A) முப்படை வீரர்கள்

(B) மத்திய ரிசர்வ் காவல் படையினர்

(C) சிவில் சர்ஜனிடம் சான்று பெற்ற உடல் ஊனமுற்றோர்

(D) வழக்கறிஞர்கள்

39. What is the minimum working Balance of the estimated receipts of the year to be provided while preparing the Panchayat union Budget?

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

ஊராட்சி ஒன்றிய குழுவின் வரவு-செலவு திட்டம் தயாரிக்கும்போது முடிவிருப்புத் தொகை சாதாரண தலைப்பு முடிவில் குறைந்த பட்சம் எத்தனை சதவீதம் இருக்குமாறு தயாரிக்கப்பட வேண்டும்?

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

40. What is the Due-date for submission of Panchayat union Budget to the collector?

(A) $30^{th}$ November of the succeeding budget year

(B) $30^{th}$ November of the preceding budget year

(C) $30^{th}$ September of the preceding budget year

(D) $30^{th}$ September of the succeeding budget year

ஊராட்சி ஒன்றியக்குழுவின் வரவு-செலவுத் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டிய நாள் விபரம் என்ன?

(A) நிதியாண்டிற்கு பிந்தைய ஆண்டின் நவம்பர் 30ஆம் நாள்

(B) நிதியாண்டிற்கு முந்தைய ஆண்டின் நவம்பர் 30ஆம் நாள்.

(C) நிதியாண்டிற்கு முந்தைய செப்டம்பர் 30ஆம் நாள்

(D) நிதியாண்டிற்கு பிந்தைய செப்டம்பர் 30ஆம் நாள்

41. Who is the Competent authority of write-off a loss of Rs. 5,000/- to the funds of the Panchayat Union due to theft, fire and accident?

(A) Panchayat Union Council

(B) Collector

(C) Assistant Director (Panchayats)

(D) Director of Rural Development

ஊராட்சி ஒன்றிய குழுவின் நிதிகளில் திருட்டு/நெருப்பு/விபத்து ஆகிய காரணங்களால் தொகை ரூ. 5,000/- இழப்பு ஏற்பட்டால், இழப்புத் தொகையினை தள்ளுபடி செய்யும் அதிகாரம் படைத்தவர் பெயர்?

(A) ஊராட்சி ஒன்றியக்குழு

(B) மாவட்ட ஆட்சித் தலைவர்

(C) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(D) ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர்

42. In Brick work the check measurement is done at the stage of

(A) After RCC

(B) During Brick Work

(C) Before Painting

(D) Before Plastering

செங்கல் கட்டுமான வேலையில் மேல்அளவு செய்யப்படவேண்டிய நிலை

(A) RCC வேலை முடித்த பின்பு

(B) செங்கல் அடுக்கும்பொழுது

(C) வர்ணம் பூசும் முன்பு

(D) பூச்சு வேலை செய்வதற்கு முன்பு

43. Who can accord sanction for capital works estimated Rs. 5 lakhs to Rs. 10 lakhs from surplus fund of the Panchayat Union-general fund

(A) Council (B) Assistant Director (Panchayats)

(C) Collector (D) Director of Rural Development

ஊராட்சி ஒன்றிய பொது நிதி உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் ரூ. 5 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரையிலான மூலதன பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க கூடியவர்

(A) ஊராட்சி ஒன்றியக்குழு (B) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(C) மாவட்ட ஆட்சித் தலைவர் (D) ஊரக வளர்ச்சி இயக்குநர்

44. What is the Upper Ceiling amount of Incurring expenditure to conduct Grama Sabha meetings?

(A) Rs. 500 (B) Rs. 1,000

(C) Rs. 1,500 (D) Rs. 2,000

கிராம சபை கூட்டம் நடத்த மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையின் உச்ச வரம்பு என்ன?

(A) ரூ. 500 (B) ரூ. 1,000

(C) ரூ. 1,500 (D) ரூ. 2,000

45. As per the Tamil Nadu Local Fund Audit Act 2014, what is the time limit for the completion of Audit on Accounts submitted by the Local Bodies?

(A) One month (B) Two months

(C) Six months (D) One Year

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014ன்படி ஆண்டுக் கணக்குகள் அளிக்கப்பட உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கை முடிக்க வேண்டிய கால அளவு என்ன?

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) ஆறு மாதங்கள் (D) ஒரு வருடம்

46. What is the percentage of contribution payable to the Local planning authority by Municipalities (other than Chennai)

(A) 1% of Net receipts (B) 0.75% Net Receipts

(C) 0.25% Net receipts (D) 1% Gross Receipts

சென்னை புறநகர் தவிர்த்த இதர நகராட்சிகளில் உள்ளூர் திட்டக்குழுமத்துக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகை

(A) நிகர வருவாயில் 1% (B) நிகர வருவாயில் 0.75%

(C) நிகர வருவாயில் 0.25% (D) மொத்த வருவாயில் 1%

47. Who is eligible to get Bonus for 100% Tax Collection in Town Panchayats?

(A) Junior Asst. only

(B) Bill Collector and Junior Asst.

(C) Bill Collector only

(D) Bill Collector and Sanitary Maistry

பேரூராட்சிகளில் 100% வரி வசூலுக்கான போனஸ் தொகை யாருக்கு வழங்கப்படுகிறது?

(A) இளநிலை உதவியாளருக்கு மட்டும்

(B) வரித்தண்டலர் மற்றும் இளநிலை உதவியாளர்

(C) வரித்தண்டலருக்கு மட்டும்

(D) வரித்தண்டலர் மற்றும் துப்பரவு மேற்பார்வையாளர்

48. What is the rate of penalty to be collected on belated payment of lease amount in municipalities?

(A) 10% (B) 12%

(C) 16% (D) 18%

நகராட்சிகளில் காலதாமதமாக செலுத்தப்படும் குத்தகை கட்டணத்தின் மீது வசூலிக்கப்படும் அபராதத் தொகை எவ்வளவு?

(A) 10% (B) 12%

(C) 16% (D) 18%

49. What is the periodic cycle adopted for painting works?

(A) Once in year (B) Once in three years

(C) Once in five years (D) Once in six years

வர்ணம் பூசும் (painting) வேலைக்கான கால அவகாசம் என்ன?

(A) ஒரு ஆண்டுக்கு ஒரு முறை (B) மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை

(C) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை (D) ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை

50. What is the amount of Track Rent from telecom companies for municipalities as per G.O. No. 172 Revenue 28.03.2000?

(A) Rs. 5,500 (B) Rs. 6,050

(C) Rs. 6,300 (D) Rs. 9,400

அரசாணை எண்.172. வருவாய்த் துறை, நாள். 28.03.2000ன்படி நகராட்சியிலுள்ள தொலை தொடர்பு நிறுவனங்களிடமிருந்து ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ஆண்டுக்கு பெற வேண்டிய தட வாடகை எவ்வளவு?

(A) ரூ. 5,500 (B) ரூ. 6,050

(C) ரூ. 6,300 (D) ரூ. 9,400

51. What is the percentage of lease amount to be increased in third year as per G.O. No. 181, MAWS Dt. 19.09.2008?

(A) 3% (B) 5%

(C) 10% (D) 15%

அரசாணை எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008ன்படி மூன்றாவது ஆண்டில் உயர்வு செய்ய வேண்டிய குத்தகை சதவீதம் எவ்வளவு?

(A) 3% (B) 5%

(C) 10% (D) 15%

52. What is the amount payable as Funeral Rites for Adi-dravidars?

(A) Rs. 500 (B) Rs. 1,000

(C) Rs. 2,000 (D) Rs. 2,500

ஆதிதிராவிடர் இனத்தவருக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு மானியத் தொகை

(A) ரூ. 500 (B) ரூ. 1,000

(C) ரூ. 2,000 (D) ரூ. 2,500

53. The competent authority to sanction pension to the non-provincialised employees of a Panchayat Union

(A) District Collector (B) Director of Rural development

(C) Accountant General (D) Director of Local Fund Audit

ஊராட்சி ஒன்றியத்தில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரம் உடையவர்

(A) மாவட்ட ஆட்சித் தலைவர் (B) ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர்

(C) மாநில கணக்காயர் இயக்குநர் (D) உள்ளாட்சி நிதித் தணிக்கை

54. As per G.O. Ms. No. 54, RDPR dept. Dated 25.06.12 Monthly Honorarium to the Village Panchayat President is

(A) Rs. 500 (B) Rs. 1,000

(C) Rs. 1,500 (D) Rs. 100

அரசாணை நிலை எண். 54, ஊ.வ.ம. ஊராட்சிகள் துறை, நாள். 25.06.2012ன்படி கிராம ஊராட்சித் தலைவருக்கான மாதாந்திர மதிப்பூதியம்

(A) ரூ. 500 (B) ரூ. 1,000

(C) ரூ. 1,500 (D) ரூ. 100

55. What is the Audit fees payable for auditing Arasar Chatram, Thanjavur?

(A) 0.25% (B) 0.50%

(C) 0.75% (D) 1%

தஞ்சாவூர் அரசர் சத்திரத்தின் தணிக்கைக்கான தணிக்கைக் கட்டணம் என்ன?

(A) 0.25% (B) 0.50%

(C) 0.75% (D) 1%

56. The period of leasing for Municipal properties (Shop and Land) may be upto ——— years at a time.

(A) 9 years (B) 5 years

(C) 3 years (D) 2 years

நகராட்சிக்கு சொந்தமான சொத்துகள் (கடை/நிலம்) எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை குத்தகைக்கு விடப்படுகிறது?

(A) 9 ஆண்டுகள் (B) 5 ஆண்டுகள்

(C) 3 ஆண்டுகள் (D) 2 ஆண்டுகள்

57. Whose permission is necessary for the erection of digital banners in village panchayat area as per the Tamil Nadu Panchayats (Erection of Placards and collection of Advertisement Tax) rules 2009?

(A) Block Development Officer (B) Assistant Director (Panchayats)

(C) Village Panchayat President (D) District Collector

தமிழ்நாடு ஊராட்சிகளின் விதிகள் 2009ன்படி (விளம்பர பலகைகள் உரிமம், தீர்வை மற்றும் விளம்பர வரி வசூலித்தல்) கிராம ஊராட்சி பகுதிகளில் விளம்பர பதாகைகள் நிறுவ யாரது அனுமதி பெறப்பட வேண்டும்?

(A) வட்டார வளர்ச்சி அலுவலர் (B) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(C) கிராம ஊராட்சி தலைவர் (D) மாவட்ட ஆட்சித் தலைவர்

58. What is the discount allowed in assessment of property tax if the age of the building is 5 years to 15 years?

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை பழமையான கட்டிடத்திற்கு சொத்து வரி விதிப்பின் போது அனுமதிக்கக்கூடிய தள்ளுபடி எவ்வளவு?

(A) 5% (B) 10%

(C) 15% (D) 20%

59. Which tax is collected as a surcharge as railway fares by the railway administration?

(A) Timber Tax (B) Pilgrim Tax

(C) Tax on Servants (D) Vehicle, Animal and Cart Tax

இரயில்வே நிர்வாகத்தின் மூலம் புகை வண்டி கட்டணத்தின் மீது மேல்வரியாக வசூலிக்கப்படும் வரி இனம் எது?

(A) மரவரி (B) யாத்திரீகர் வரி

(C) வேலையாட்கள் மீதான வரி (D) வாகன விலங்கு மற்றும் வண்டி வரி

60. As per G.O.M.S. No. 983, Home (Transport-IV) dept, date 03.08.2004, the repairs to vehicle ceiling limit on expenditure after 10 years for Heavy vehicle – Diesel.

(A) Rs. 9,000 (B) Rs. 12,000

(C) Rs. 18,000 (D) Rs. 20,000

அரசு ஆணை எண்.983, உள்துறை (போக்குவரத்து – IV) துறை, நாள் 03.08.2004ன்படி பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட டீசல் கனரக வாகன பராமரிப்பு செலவினத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பு செலவினம்

(A) ரூ. 9,000 (B) ரூ. 12,000

(C) ரூ. 18,000 (D) ரூ. 20,000

T.C : 50

005/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

DEPARTMENTAL EXAMINATIONS

# SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS - PAPER - II (ACCOUNTS AND AUDIT OF LOCAL BODIES APPLICATION OF RULES AND AUDIT CHECKS)

(Without Books)

Maximum Time : 1 hour Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

**DESCRIPTIVE TYPE**

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

Answer any EIGHT of the following. $(8 \times 5 = 40)$

1. Who are the Chairman, Vice-Chairman and Members of the District High level committee constituted for the settlement of long pending Audit objections of Town Panchayats?
   பேரூராட்சிகளில் நெடுங்காலமாக நிலுவையில் இருக்கும் தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்வதற்காக அமைக்கப்பட்ட மாவட்ட உயர்மட்டக் குழுவின் தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர் விபரம் குறிப்பிடுக.

2. What is the responsibility fixed for various level officers of Town Panchayat for losses caused due to Time Barred Arrears of Taxes and fees?
   காலங்கடந்த வரிகள் மற்றும் கட்டணங்கள் நிலுவை தொடர்பாக பேரூராட்சி பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொறுப்பு விபரம் குறிப்பிடுக.

[Turn over

3. What are the free calls allowed in respect of Residential telephones of municipal commissioners?

நகராட்சி ஆணையர்களின் இல்லத் தொலைபேசிகளுக்கு வழங்கப்படும் இலவச தொலைபேசி அழைப்புகளின் விபரம் குறிப்பிடுக.

4. What are the period of substitution of electrical materials regarding local bodies?

உள்ளாட்சி நிறுவனங்களில் மின்சாதனங்கள் மாற்றுவதற்கான கால வரையறை குறிப்பிடுக.

5. What are the fixed travelling allowance to district panchayat, panchayat union and village panchayat chairman and members?

மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்படும் நிரந்தரப் பயணப்படி விபரத்தை குறிப்பிடுக.

6. What are the fluctuating items of revenue in a municipality?

நகராட்சிகளின் ஏற்ற இறக்கமுள்ள வருவாய் இனங்களை குறிப்பிடுக.

7. Who accord the Administrative Sanction for the Works carried out from the surplus funds of panchayat union?

ஊராட்சி ஒன்றிய பொது நிதி உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் மூலதனப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

8. What is the ceiling of expenditure for conduct of sports by local bodies?

உள்ளாட்சி நிறுவனங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பு தொகை குறிப்பிடுக.

9. What is the responsibility to be fixed for losses noticed in works expenditure of Town Panchayats?

பேரூராட்சிகளில் வேலைச் செலவினத்தில் காணப்படும் இழப்புகளுக்கு எந்த விகிதங்களில் பொறுப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது?

10. What is the penalty that can be imposed under the local fund Act 2014, for the non-submission of Annual accounts within the time specified?

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014ன் படி ஆண்டுக் கணக்குகள் உரிய நாளுக்கு முன்னர் தயார் செய்து அளிக்கப்படாமைக்கு விதிக்கப்படும் தண்டத் தொகை விபரம் குறிப்பிடுக.

---